# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

மனு எண்: 401/2017/ஊராட்சி

ஆணை எண்: 061/2017

நாள்: 30/03/2017

E. சிவபெருமாள்,
104/56A, தெற்கு தெரு,
ஆணையப்பபுரம், நாங்குநேரி.

- மனுதாரர்

முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும்
ஊராட்சி மன்ற செயலாளர்,
ஆழ்வாநேரி ஊராட்சி.

- எதிர் மனுதாரர்கள்

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், ஆணையப்பபுரத்தில் வசிக்கும் திரு. E. சிவபெருமாள் என்பவர், அவருடைய நாளிடப்படாத மனுவில் அரசுக்கு சொந்தமான அதாவது ஆழ்வாநேரி கிராமம், புதுக்குறிச்சியில் கிராம புல எண்.114/1ல் மந்தை புறம்போக்கு 0.73.55 ஹெக்டேர் நிலத்திற்கு தனி நபருக்கு வீட்டுத் தீர்வை வழங்கப்பட்டுள்ளது என்றும், இதற்கு பொறுப்பான முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற செயலாளர் மீது நடவடிக்கை எடுக்க வட்டார வளர்ச்சி அலுவலர், நாங்குநேரி ஒன்றியம் அவர்களுக்கு முறையீடு

செய்தும் நடவடிக்கை எடுக்கவில்லையெனத் தெரிவித்து, அவர்கள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017

செயலாளர்.

7/4/17

7/4/17

பெறுநர்

E. சிவபெருமாள்,
104/56A, தெற்கு தெரு,
ஆனையப்பபுரம், பருத்திபாடு,
நாங்குநேரி, திருநெல்வேலி.

நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி மாவட்டம்,
திருநெல்வேலி. (இணைப்புகளுடன்)

உதிரி – 5